# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றம்

---

## 2009 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க, கரையோரக் காவல் திணைக்களச் சட்டம்

---

*(2009 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 06 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

---

2009, ஓகத்து மாதம் 07 ஆந் தேதிய **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்** II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 13.00** **தபாற் செலவு : ரூபா 5.00**

**2009 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க, கரையோரக் காவல் திணைக்களச் சட்டம்**

[*2009 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 06 ஆம் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது.*]

*ச.வ.ஓ. 29/2007*

**கரையோரக் காவல் திணைக்களமொன்றைத் தாபிப்பதற்கும், கரையோரக் காவல் திணைக்களத்தின் பணிகளைக் குறித்துரைப்பதற்கும் ஏற்பாடு செய்வதற்கும்; அத்துடன் அதனோடு தொடர்புடைய அல்லது அதன் இடைநேர் விளைவான கருமங்களுக்கு ஏற்பாடு செய்வதற்குமானதொரு சட்டம்**

*இலங்கையின் கரையோர இடப்பரப்புகளினதும் கடலோர வலயங்களினதும் ஆள்புல நீர்ப் பரப்புகளின் பாதுகாப்பை உறுதிப் படுத்தும் நோக்கத்திற்கு கரையோரக் காவல் சேவை என அழைக் கப்பட வேண்டிய பன்முகப் பணித்துறை சேவையொன்றைத் தாபிப்பதற்கு ஏற்பாடு செய்வது உசிதமானதாதலாலும்:* முன்னுரை.

*கரையோரக் காவல் திணைக்களம் சட்டவிரோதமான குடிவரவோரினதும் குடியகல்வோரினதும் உட்பிரவேசத்தையும் வெளியேற்றத்தையும் போதையூட்டும் ஔடதங்களினதும் உளமருட்சியூட்டும் பதார்த்தங்களினதும் வியாபாரத் தொடர்பை தடைசெய்வதிலும் கள்ளச் சரக்குகளையும் ஆயுதங்களையும் கண்டுபிடிப்பதிலும் பறிமுதல் செய்வதிலும் கடலில் இடருக்குள் ளாகும் கப்பல்களுக்கும் அத்தகைய கப்பல்களில் காணப்படும் ஆட்களுக்கும் உதவி வழங்குதலை பொறுப்பிக்கப்பட்டிருத் தல் வேண்டும் ஆதலாலும் கடலோரப் போக்குவரத்தின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதில் உதவியை ஏற்பாடு செய்தலும் கரையோரச் சூழலைப் பாதுகாப்பதிலும் கடலோர அனர்த்தங் களைத் தடுப்பதிலும் எதிர்த்துப் போராடுவதிலும் உள்ளூர் மற்றும் வெளிநாட்டு ஒழுங்கமைப்புகளுடன் ஒத்துழைப்பு வழங்குவதிலும் துணைபுரிய வேண்டுமாதலாலும் அத்தகைய எல்லா துறைகளிலும் தேசிய நலனைப் பாதுகாக்கும் நோக்கத்திற் காகவும் அதன்மூலம் தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற் காகவும் அத்துடன் தேசிய பொருளாதாரத்தையும் இலங்கையின் தேசிய ஒருமைப்பாட்டையும் பாதுகாப்பதற்காகவும் துணைபுரிய வேண்டுமாதலாலும்:*

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத் தால் இத்தால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:-*

2-PL 004112 -1,025 (2008/08)

*சுருக்கப் பெயர்.*

**1.** இச்சட்டம் 2009ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க கரையோரக் காவல் திணைக்களச் சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

## பாகம் I

### கரையோரக் காவல் திணைக்களத்தைத் தாபித்தல்

*கரையோரக் காவல் திணைக்களம்.*

**2.** (1) கரையோரக் காவல் திணைக்களமொன்றிருத்தல் வேண்டும். இது கரையோரக் காவல் பணிப்பாளர் தலைமையதிபதியின் கட்டுப்பாட்டின் கீழிருத்தல் வேண்டும் .

(2) கரையோரக் காவல் திணைக்களம் இச்சட்டத்தில் குறித்துரைக்கப்பட்ட தத்துவங்களையும், கடமைகளையும், பணிகளையும் நடைமுறைப்படுத்தும் பொறுப்பு ஒப்படைக்கப் பெற்றிருத்தல் வேண்டும் என்பதுடன், கரையோரக் காவல் சேவை முறையாகவும் வினைத்திறனுடனும் செயற்படுவதற்குப் பொறுப்புடையதாதலும் வேண்டும்.

*கரையோரக் காவல் திணைக் களத்தைத் தாபித்தல்.*

**3.** இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கிணங்க கரையோரக் காவல் சேவை என அழைக்கப்படவுள்ள சேவையொன்று தாபிக்கப்படுதல் வேண்டும். இது கரையோர இடப்பரப்புகளிலும் இலங்கைக் கடலோர வலயங்களிலும் ஆழ் கடலிலும் சட்டத்தை வலுவுக்கிடும் பணிக்குப் பொறுப்புடையதாதல் வேண்டும்.

## பாகம் II

### கரையோரக் காவல் திணைக்களத்தின் கடமைகளும் பணிகளும்

*கரையோரக் காவல் திணைக்களத்தின் கடமைகளும் பணிகளும்*

**4.** கரையோரக் காவல் திணைக்களத்தின் பணிகள் பின்வருவனவாதல் வேண்டும் :

(அ) இலங்கைக் கரையோர இடப்பரப்புகளில் சட்ட விரோதமாக மீன் பிடித்தலை தடுத்தலும் கடலில் மீனவர்களுக்கு உதவி வழங்கல் உட்பட மீனவர்களைப் பாதுகாத்தலும்;

(ஆ) கள்ளக் கடத்தல் மற்றும் குடியேற்ற நடவடிக்கைகளை எதிர்த்துப் போராடுவதில் சுங்கப் பகுதிக்கும் வேறு இயைபான அதிகாரிகளுக்கும் துணைபுரிதல் ;

(இ) கடலில் கடற்கொள்ளையை தடுப்பதற்கும் முகாமை செய்வதற்கும் செயற்பாடுகளை தொடக்கி வைத்தல் ;

(ஈ) இலங்கைக் கடலோர வலயங்கலிலும் ஆள்புல நீர்ப்பரப்புகளிலும் இடம்பெறும் நாசகார, பயங்கரவாத நடவடிக்கைகளை அடக்குவதற்கு அவசியமான வழிமுறைகளை மேற்கொள்வதன்மூலம் சட்டத்தை வலுவுக்கிடும் முகவராண்மைகளுடனும் ஆயுதந்தாங்கிய படைகளுடனும் ஒத்துழைத்தல்;

(உ) கடலில் எல்லை தாண்டிய போதைப் பொருட்களின் நடமாட்டத்தைத் தடுத்தல்;

(ஊ) கடலில் உயிர் மற்றும் உடைமைகளினது பாதுகாப்பை உறுதிப்படுத்துவதில் இயைபான அதிகாரிகளுக்கு உதவுதல் ;

(எ) இயற்கைப் பேரழிவின் நேரங்களில் மனிதர்களைத் தேடுதலிலும் மீட்பதிலும் பங்குபற்றுதலும் கடலில் அத்தகைய பேரழிவுகளினதும் வேறு விபத்துக்களினதும் பின்னர் கலங்கள் மற்றும் வேறு பண்டங்கள் தொடர்பில் அழிவுமீட்பு நடவடிக்கைகளில் துணைபுரிதலும்;

(ஏ) கடலோர மற்றும் கடற்சூழல் பேணலிலும் பாதுகாப்பிலும் துணைபுரிதல்;

(ஐ) கடற் தீழ்ப்பையும் கடலில் ஏற்படும் ஏனைய அனர்த்தங்களையும் தடுப்பதற்கும் கட்டுப்படுத்துவதற்கும் தேவையான வழிமுறைகளின் அமுலாக்கல் மற்றும் கண்காணித்தலில் இயைபான அதிகாரிகளுக்கு உதவுதல் ;

(ஒ) கடற் தாவர உயிரினங்களை பேணிக் காத்தலில் துணைபுரிதல்;

(ஓ) இயற்கைப் பேரழிவு நேரங்களில் வானொலி அல்லது வேறு வழிமுறைகளால் எச்சரிக்கை செய்தல் உட்பட தகவலைப் பரப்புதல்; அத்துடன்

(ஔ) அரசாங்கத்தால் காலத்துக்குக்காலம் அதற்கு உரித்தாக் கப்படக் கூடியவாறான அல்லது குறித்தொதுக்கப்படக் கூடியவாறான அத்தகைய வேறு பணிகளைப் புரிதல்.

*கரையோரக் காவல் திணைக் களத்தின் தத்துவங்கள்.*

**5.** (1) கரையோரக் காவல் திணைக்களம் பின்வரும் தத்துவங் களைக் கொண்டிருத்தல் வேண்டும்:

(அ) ஏதேனும் கலத்தை அல்லது வானூர்தியை நிறுத்து வதற்கும் உட்பிரவேசிப்பதற்கும் அதில் தங்கியிருப்ப தற்கும் ஏதேனும் இடத்தை அல்லது கட்டமைப்பை பரிசீலனைசெய்வதற்கும் தேடுகை செய்வதற்கும் ஏதேனும் கலத்தை அல்லது வானூர்தியை கைது செய்வதற்கும் தடுத்து வைப்பதற்கும்;

(ஆ) ஏதேனும் உரிமத்தை, அனுமதிப்பத்திரத்தை, பதிவேட்டை, சான்றிதழை அல்லது வேறு ஆவணத்தை முன்வைக்கக் கோருவதற்கும் அத்தகைய உரிமத்தை, அனுமதிப்பத்திரத்தை, பதிவேட்டை, சான்றிதழை அல்லது வேறு ஆவணத்தைப் பரிசீலனை செய்வதற் கும் அத்தகைய உரிமத்தை, அனுமதிப்பத்திரத்தை, பதிவேட்டை, சான்றிதழை அல்லது வேறு ஆவணத் தைப் பிரதி பண்ணுவதற்கும் அல்லது அதிலிருந்து பிரித்தெடுப்புகளைப் பெறுதற்கும்;

(இ) எந்தத் தவறு புரியப்படுவதாக அல்லது புரியப்படப் போவதாக அல்லது புரியப்பட்டுள்ளதாக நம்புவதற்கு அதற்குக் காரணமாயிருக்கின்றதோ அந்த ஏதேனும் தவறைப் புலனாய்வு செய்வதற்கும்;

(ஈ) கலைத்துப் பிடிப்பதற்கான உரிமையைப் பிரயோகிப் பதற்கும்;

(உ) எத்தவறு புரியப்பட்டுள்ளதோ அல்லது எத்தகைய தவறு புரியப்பட்டுள்ளதாக நம்புவதற்கு அதற்குக் காரணமிருக்கின்றதோ அந்த ஏதேனும் தவறு தொடர்பில் ஏதேனும் மீனை அல்லது வேறு பொருளை, உபாயத்தை, பண்டங்களை, கலத்தை, வானூர்தியை அல்லது வேறு ஏதேனும் பொருளைப் பரிசீலனை செய்வதற்கும், பறிமுதல் செய்வதற்கும் அல்லது கையுதிர்ப்பதற்கும்; அத்துடன்

(ஊ) எந்த ஆள் இலங்கையின் அப்போதைக்கு வலுவிலுள்ள ஏதேனும் எழுத்திலான சட்டத்தின்கீழ் தவறொன்று புரிந்துள்ளதாக நம்புவதற்கு அதற்குக் காரணமிருக்கின்றதோ அந்த ஆளைக் கைது செய்வதற்கும்.

(2) ஓராம் உட்பிரிவின் ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும் ஆட்புலக் கடலினுள் ஏதேனும் கலத்தின் செலவு பாதகமற்றவொரு செலவாக இருப்பின், அக்கலம் ஆள்புலக் கடலின் இடப்பரப்பினுள் கைது செய்யப்படுதலோ அல்லது தடுத்து வைக்கப்படுதலோ ஆகாது.

இப்பிரிவின் நோக்கத்திற்கு கலமொன்றின் செலவானது இலங்கையின் அமைதிக்கு, நல்லொழுங்கிற்கு அல்லது பாதுகாப்பிற்கு பங்கமில்லாததாயின் பாதகமற்ற செலவாகும்.

*கரையோரக் காவல் திணைக்களத்தின் உறுப்பினர்கள் சமாதான அலுவலர்களாகக் கருதப்படுதல்.*

**6.** கரையோரக் காவல் திணைக்களத்தின் கரையோரக் காவல் அலுவலர் ஒவ்வொருவரும் 1979ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கைச் சட்டக்கோவைச் சட்டத்தின் கருத்தெல்லைக்குள்ளும் மன்றும் அதன் நோக்கங்களுக்கும் சமாதான அலுவலர் ஒருவராகக் கருதப்படுதல் வேண்டும்.

*படைக் கலங்களை எடுத்துச் செல்லுதல்.*

**7.** கரையோரப் பாதுகாப்பு அலுவலர்கள் தங்கள் கடமைகளை நிறைவேற்றுவதற்கு படைக்கலங்கள் அவசியமாகின்ற அளவுக்கு அவற்றை எடுத்துச் செல்லலாம். கரையோரப் பாதுகாப்பு அலுவலர்கள் எடுத்து செல்லக்கூடிய ஆயுதங்களின் வகுதிகள் விதித்துரைக்கப்பட்டவாறாயிருத்தல் வேண்டும்.

கலமொன்றிற்குச் சென்று அதனைப் பார்வையிடுவதற்கு கரையோரக் காவல் அலுவலருக்குள்ள உரிமைகள்.

**8**. கரையோரக் காவல் அலுவலர் ஒருவர் அவரது கடமைகளைப் புரிவதற்கு அவசியமானபோது -

(அ) வைத்திருக்கத் தேவைப்படுத்தப்பட்ட கப்பலின் அலுவலக முறையான பத்திரங்களை முன்வைக்குமாறு கப்பற் தலைவனை அல்லது கலத்தை ஏவும் வேறு ஆளைப் பணிக்கலாம்;

(ஆ) கலத்தின் அடையாளத்தையும், பதிவுத் துறைமுகத்தையும் கப்பற் தலைவனின் பெயரையும், கடைசியாகப் புறப்பட்ட துறைமுகத்தையும் அல்லது இடத்தையும், சென்றடையும் துறைமுகத்தையும் இடத்தையும், கப்பற் சரக்கின் இயல்பையும் ஆய்ந்தறியும் நோக்கத்திற்காக அக்கலத்தை நிறுத்தலாம், அதற்குள் செல்லலாம் அத்துடன் பரிசீலனை செய்யலாம் ; அத்துடன்

(இ) அவரது கடமைகளைப் புரிவதற்கு அவசியமான கருமங்கள்மீது பணியாளர் குழுவிடமும் பயணிகளிடமும் கேள்வி கேட்கலாம்.

இனம் காணல்.

**9**. கரையோரக் காவல் அலுவலர் ஒவ்வொருவரும் இச்சட்டத்தின்கீழ் செயற்படும்போது சீருடையிலிருத்தலும், கோரிக்கையின்மீது அவரது பதவியை வெளிப்படுத்துதலும் மற்றும் எந்த ஆளுக்கெதிராக அவர் செயற்படுகின்றாரோ அல்லது எந்த ஆளிடமிருந்து ஏதேனும் தகவலை நாடுகின்றாரோ, அந்த ஆளுக்கு அலுவலக முறையான அடையாள அட்டையை அல்லது கரையோரக் காவல் திணைக்களத்தால் வழங்கப்பட்ட வேறு ஆளடையாள ஆவணத்தைக் காண்பித்தலும் வேண்டும்.

கரையோரக் காவல் திணைக்களம் அல்லது அதன் ஆளணியினர் இராணுவ ஒழுங்கமைப்பாகப் பயிற்றுவிக்கப்படுதலாகாது.

**10**. இச்சட்டத்திலுள்ள எதையும் இராணுவத் தாபனமொன்றாகப் பயிற்றுவிக்கப்படுவதற்கு, ஒழுங்கமைக்கப்படுவதற்கு அல்லது அவ்வாறு பணியாற்றுவதற்கு கரையோரக் காவல் திணைக்களத்தை அல்லது அதன் ஆளணியினரை அனுமதிப்பதாகப் பொருள் கொள்ளப்படுதலாகாது.

## பாகம் III

### மதியுரைப் பேரவை

**11.** அமைச்சர் மதியுரைப் பேரவையொன்றை நியமித்தல் வேண்டும். இது பின்வருவோரைக் கொண்டிருத்தல் வேண்டும்:- மதியுரைப் பேரவை.

(அ) பின்வரும் பதவிநிலை உறுப்பினர்கள்:-

(i) பாதுகாப்பு என்னும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின்அமைச்சுச் செயலாளர் அல்லது அவரது பிரதிநிதி ;

(ii) கடற்றொழில் என்னும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் அமைச்சுச் செயலாளர் அல்லது அவரது பிரதிநிதி ;

(iii) நிதி என்னும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் அமைச்சுச் செயலாளர் அல்லது அவரது பிரதிநிதி ;

(iv) துறைமுகங்கள் மற்றும் கப்பற்றொழில் என்னும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் அமைச்சுச் செயலாளர் அல்லது அவரது பிரதிநிதி;

(v) சூழல் மற்றும் இயற்கை வளங்கள் என்னும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் அமைச்சுச் செயலாளர் அல்லது அவரது பிரதிநிதி;

(vi) கரையோரக் காவல் என்னும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் அமைச்சுச் செயலாளர் அல்லது அவரது பிரதிநிதி ;

(vii) கடற்படை ஏவுநர் ;

(viii) பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதி; அத்துடன்

(xi) கரையோரக் காவல் திணைக்களத்தின் பணிப்பாளர் தலைமையதிபதி ;

(ஆ) அமைச்சர் அவசியமானதென அவருக்குத் தோன்றும் பொழுதெல்லாம், பேரவையின் பரிசீலனையின் கீழுள்ள ஏதேனும் குறித்துரைக்கப்பட்ட விடயம் தொடர்

பில் எந்த அலுவலரின் சேவைகள் பேரவையால் தேவைப்படுத்தப்படுகின்றனவோ அந்த அலுவலரை மதியுரைப் பேரவையின் சேவைகளுக்குத் தேர்ந்தெடுக்கலாம்.

*மதியுரைப் பேரவையின் பணிகள்.*

**12**. மதியுரைப் பேரவை கரையோரக் காவல் திணைக்களத்தின் செயற்பாடுகளை ஆண்டுக்கொருமுறை மீளாய்வு செய்தல் வேண்டும் என்பதுடன், அமைச்சருக்கு விரிவான அறிக்கையொன்றைச் சமர்ப்பித்தலும் வேண்டும். பேரவையானது பேரவையின் அபிப்பிராயப்படி கரையோரக் காவல் திணைக்களத்தால் நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய கொள்கைகளை அமைச்சருக்கு விதப்புரை செய்தலும் வேண்டும். பேரவை அவ்வாறு செய்யுமாறு தேவைப்படுத்தப்படும்பொழுதெல்லாம், எந்தக் கருமம் தொடர்பில் அதன் மதியுரை நாடப்படுகின்றதோ, அந்த ஏதேனும் கருமம் தொடர்பில் பாதுகாப்பு அமைச்சருக்கு மதியுரை வழங்குதலும் வேண்டும்.

*விதிகள்.*

**13**. மதியுரைப் பேரவை இச்சட்டத்தின் நோக்கங்களை நிறைவேற்றும் நோக்கத்திற்கு அதன் கூட்டங்களில் கடைப்பிடிக்கப்பட வேண்டிய நடவடிக்கைமுறை, அதன் கூட்டங்களுக்கான கூட்ட நடப்பெண், நிகழ்ச்சி நிரல் மற்றும் அறிக்கைகள் சமர்ப்பிக்கும் முறை என்பவற்றைக் குறித்துரைத்து விதிகளை ஆக்கலாம்.

*குற்ற வழக்கு.*

**14**. எழுத்திலான வேறேதும் சட்டத்தில் எது எவ்வாறிருப்பினும், ஆளொருவர் இச்சட்டத்தின்கீழ் கைது செய்யப்பட்டவிடத்து சட்டத்துறைத் தலைமையதிபதியினால் அல்லது அவரது எழுத்திலான சம்மதத்துடன் தவிர, அவ்வாளுக்கெதிராகக் குற்ற வழக்கு எதுவும் தொடரப்படுதலாகாது.

## பாகம் IV

### பொது

*அலுவலர்களின் ஊதியம் முதலியன.*

**15**. கரையோரக் காவல் திணைக்களத்தின் அலுவலர்களுக்கு நிதி என்னும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சருடனான கலந்தாலோசனையுடன் அமைச்சரால் தீர்மானிக்கப்படக் கூடியவாறான அத்தகைய வேதனம் செலுத்தப்படுதல் வேண்டும் என்பதுடன், அத்தகைய வேதனம் திரட்டு நிதியத்திற்குப் பொறுப் பாக்கப்படுதலும் வேண்டும்.

**16.** (1) கரையோரக் காவல் திணைக்களத்தின் வேண்டுகோளின் மீது பகிரங்க சேவையிலுள்ள எவரேனும் அலுவலர் அந்த அலுவலரினதும் பகிரங்க சேவை ஆணைக்குழு தவிசாளரினதும் சம்மதத்துடன் கரையோரக் காவல் திணைக்களத்தின் பணியாட்டொகுதிக்கு, திணைக்களத்தால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய காலப்பகுதிக்கு தற்காலிகமாக நியமிக்கப்படலாம் அல்லது அத்தகைய பணியாட்டொகுதிக்கு நிரந்தரமாக நியமிக்கப்படலாம். கரையோரக் காவல் திணைக்களத்திற்குப் பகிரங்க அலுவலர்களின் நியமனம்.

(2) பகிரங்க சேவையில் எவரேனும் அலுவலர் (1) ஆம் உட்பிரிவில் குறித்துரைக்கப்பட்டவாறாக திணைக்களத்தின் பணியாட்டொகுதிக்கு நியமிக்கப்படுமிடத்து, அத்தகைய நியமனம், அத்தகைய அலுவலர் அத்தகைய நியமனத் திகதிக்கு உடன்முன்னதான நாளன்று அனுபவித்துக்கொண்டிருந்த நியதிகள் மற்றும் நிபந்தனைகளுக்குக் குறையாத நியதிகள் மற்றும் நிபந்தனைகள் மீதானதாதல் வேண்டுமென்பதுடன் அத்தகைய நியமனத் திகதியில் இருந்தும் அதன்பின்னரும் அத்தகைய அலுவலர் தொடர்பான எல்லாக் கருமங்களும் காலத்திற்குக் காலம் ஏற்புடையதாகக் கூடியவாறாக காணப்படும் அரசாங்க ஒழுங்கு விதிகளினால் ஆளப்படுதலும் வேண்டும்.

(3) கரையோரக் காவல் திணைக்களம் குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதியொன்றுக்கு அரசாங்கத்திற்கு சேவையாற்ற உடன்பட்டுள்ள எவரேனும் ஆளை நியமிக்குமிடத்து, அவ்வாளினால் திணைக்களத்திற்கான அத்தகைய சேவைக்காலம், அத்தகைய உடன்படிக்கைக்கான அக்கடப்பாட்டை நிறைவேற்றும் நோக்கத்திற்கு அரசாங்கத்திற்கான சேவையாகக் கருதப்படுதல் வேண்டும்.

**17.** (1) கரையோரக் காவல் திணைக்களத்தின் வேண்டுகோளின் பேரில் ஏதேனும் பகிரங்கக் கூட்டுத்தாபனத்தின் எவரேனும் அலுவலர் அல்லது சேவையாளர் அத்தகைய அலுவலரினதும் அல்லது சேவையாளரினதும் அத்துடன் அத்தகைய அலுவலரின் அல்லது சேவையாளரின் ஆளும் சபையினதும் சம்மதத்துடன் திணைக்களத்தாலும் அத்தகைய கூட்டுத்தாபனத்தின் ஆளும் சபையாலும் உடன்பட்டுக் கொள்ளக்கூடியவாறான அத்தகைய நியதி நிபந்தனைகள்மீது திணைக்களத்தால் தீர்மானிக்கப்படக் கூடியவாறான அத்தகைய காலப்பகுதிக்கு திணைக்களத்தின் பணியாட்டொகுதிக்குத் தற்காலிகமாக நியமிக்கப்படலாம். கரையோரக் காவல் திணைக்களத்தின் பணியாட்டொகுதிக்கு பகிரங்கக் கூட்டுத்தாபனங்களின் அலுவலர்களிதும் சேவையாளர்களினதும் நியமனம்.

(2) எவரேனும் ஆள் (1) ஆம் உட்பிரிவின்கீழ் திணைக்களத்தின் பணியாட்டொகுதிக்கு நியமிக்கப்படுமிடத்து, அத்தகைய ஆள் பணியாட்டொகுதியின் வேறு எவரேனும் உறுப்பினரைப் போன்று, அதே ஒழுக்காற்றுக் கடப்பாட்டிற்கு அமைந்தவராதல் வேண்டும்.

தவறுகள்.

**18.** அவரது கடமைகளை நிறைவேற்றுகையில் இச்சட்டத்தின் அல்லது எழுத்திலான வேறேதேனும் சட்டத்தின் ஏற்பாட்டிற்கு முரணாகச் செயற்படும் கரையோரக் காவல் அலுவலர் எவரும் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன், நீதிவானொருவரால் விசாரணை செய்யப்படுவதற்கும் மற்றும் அத்தகைய தவறுக்குக் குறித்துரைக்கப்படக் கூடியவாறான அத்தகைய தண்டனையால் தண்டிக்கப்படுவதற்கும் ஆளாதலும் வேண்டும்.

ஒழுங்கு விதிகள்.

**19.** (1) அமைச்சரானவர் மதியுரைப் பேரவையின் விதப்புரையின்மீது இச்சட்டத்தின் கோட்பாடுகளுக்கும் ஏற்பாடுகளுக்கும் பயனளிப்பதற்கும் அத்துடன் விதித்துரைக்கப்படவேண்டுமென இச்சட்டத்தால் தேவைப்படுத்தப்பட்ட கருமங்கள் தொடர்பிலும் அல்லது எக்கருமங்கள் தொடர்பில் ஒழுங்குவிதிகள் ஆக்கப்படுவதற்கு அதிகாரமளிக்கப்படுகின்றதோ அல்லது தேவைப்படுத்தப்படுகின்றதோ அக்கருமங்கள் தொடர்பிலும் ஒழுங்குவிதிகளை ஆக்கலாம்.

(2) ஓராம் உட்பிரிவால் உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பொதுமைக்குப் பங்கமின்றி பின்வரும் ஏதேனும் அல்லது எல்லாக் கருமங்கள் தொடர்பிலும் ஒழுங்குவிதிகள் ஆக்கப்படலாம் :-

(அ) கரையோரக் காவல் திணைக்களத்தின் அமைப்பு, ஆளுகை, தகைமைகள், ஆணை அத்துடன் ஒழுக்காறு;

(ஆ) கரையோரக் காவல் திணைக்களத்திற்கு ஆட்களின் ஆட்சேர்ப்பு;

(இ) கரையோரக் காவல் திணைக்களத்தின் உறுப்பினர்களது சேவை நிபந்தனைகள்;

(ஈ) அலுவலர்களினதும், கீழ் நிலை அலுவலர்களினதும் மற்றும் வேறு ஆட்களினதும் பதவி வரிசை, தத்துவங்கள் அத்துடன் அதிகாரம்;

(உ) அலுவர்களினதும், கீழ்நிலை அலுவலர்களினதும் மற்றும் சேர்த்துக் கொள்ளப்பட்ட வேறு ஆட்களினதும் பதவி நீக்கம், ஓய்வு பெறல், விடுவிப்பு, பதவியுயர்வு அல்லது கரையோரக் காவல் திணைக்களத்திலிருந்து விடுவிக் கப்படல்;

(ஊ) வேறு எந்தக் கருமங்கள் விதித்துரைக்கப்படவுள்ள னவோ அல்லது விதித்துரைக்கப்படக்கூடுமோ அல்லது எந்தக் கருமங்கள் தொடர்பில் ஏற்பாடெதுவும் செய்யப் படவில்லையோ அல்லது அமைச்சரின் அபிப்பிராயப் படி இச்சட்டம் தகுந்தவாறு நடைமுறைப்படுத்தப்படு வதற்கு அவசியமாகின்றதும் மற்றும் போதியளவு ஏற்பாடு செய்யப்படாதிருக்கின்றதுமான வேறு ஏதேனும் கருமம்.

(3) அமைச்சரால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதி ஒவ்வொன்றும் வர்த்தமானியில் வெளியிடப்படுதல் வேண்டும் என்பதுடன், அத்தகைய வெளியீட்டுத் திகதியன்று அல்லது ஒழுங்குவிதியில் விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய பிந்திய திகதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

(4) அமைச்சரால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதி ஒவ்வொன்றும் அது வர்த்தமானியில் வெளியிடப்பட்டதன்பின்னர் வசதிப்படக் கூடிய விரைவில் அங்கீகாரத்திற்கென பாராளுமன்றத்தின் முன்னிலைக்குக் கொணரப்படுதல் வேண்டும். அவ்வாறு அங்கீகரிக்கப்படாத ஏதேனும் ஒழுங்குவிதி அத்தகைய அங்கீகார மறுப்பின் தேதியிலிருந்து, ஆனால் அதன்கீழ் முன்னர் செய்யப்பட்ட எதற்கும் பங்கமின்றி இல்லாதொழிக்கப்பட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(5) ஏதேனும் ஒழுங்குவிதி இல்லாதொழிக்கப்பட்டதாகக் கருதப்பட்ட தேதி பற்றிய அறிவித்தல் வர்த்தமானியில் வெளி யிடப்படுதல் வேண்டும்.

**20.** அமைச்சரவையின் முடிவொன்றைப் பின்பற்றி தாபிக்கப் பட்டதும் தற்பொழுது கடற்றொழில் மற்றும் நீர்வாழ் உயிரின வளங்கள் அமைச்சைச் சார்ந்துள்ளதுமான கரையோரக் காவல் கூறு இச்சட்டம் நடைமுறைக்கு வரும் தேதியிலிருந்து எல்லா ஆளணியினருடனும் ஆதனங்கள் மற்றும் ஏனைய சொத்துக்களு டனும் சேர்த்து பாதுகாப்பு மற்றும் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சுக்கு மாற்றப்பட்டதாதல் வேண்டும்.

*கடற்றொழில் மற்றும் நீர்வாழ் உயிரின வளங்கள் அமைச்சைச் சேர்ந்த கரையோரக் காவல் கூறினை மாற்றுதல்.*

*ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

**21.** இச்சட்டத்தில் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

*பொருள் கோடல்.*

**22.** இச்சட்டத்தில் சந்தர்ப்பம் வேறு வகையாகத் தேவைப் படுத்தினாலன்றி —

"கரையோரக் காவல் அலுவலர்" என்பது கரையோரக் காவல் திணைக்களத்தின் நிரந்தர சேவையிலுள்ள எவரேனும் ஆள் எனப் பொருள்படும் ;

"கடலோர வலயங்கள்" என்பது 1977ஆம் ஆண்டின் 22ஆம் இலக்க, கடலோர வலயங்கள் சட்டத்திலுள்ள அதே பொருளைக் கொண்டிருத்தல் வேண்டும் ;

"ஆள்புல நீர்ப்பரப்புகள்" என்பது அரசியலமைப்பிலுள்ள அதே பொருளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

*பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 : ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. 163, கிருலபனை மாவத்தை, பொல்ஹேன்கொடை, கொழும்பு 05 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்*